திரு. ஏ. எம். இராஜா : இந்த பீட்ரூட்டிலிருந்து சர்க்கரை 12 சதவிகிதம் கிடைக்குமென்று கூறப்படுகிறது. குளிர்ந்த பிரதேசங்களில் இது நன்றாக விளையும் என்று கூறப்படுகிறது. மேட்டுப்பாளையம், கோத்தகிரி போன்ற பகுதிகளில் பீட்ரூட் பயிர் செய்தால் அதன் மூலம் அந்தப் பகுதியில் பெரிய நாயக்கன்பாளையத்தில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்டிருக்கும் சர்க்கரை ஆலையில் சர்க்கரை உற்பத்திச் செய்ய வசதியாக இருக்கும். அந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய கரும்பு தேவையான அளவுக்கு இல்லாமல் இருப்பதோடு ரெக்கவரியும் அதிகமாக இல்லை. இதனால் அந்த ஆலையில் 10 அல்லது 20 லட்சம் ரூபாய் நஷ்டம் கூட ஏற்பட்டது. ஆகவே, அந்த ஆலையை கரும்பு ஆலையாக இல்லாமல் பீட் சர்க்கரை ஆலையாக மாற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நம்முடைய நாட்டுக்கு ஏற்றது தானா என்பதை முதலில் பரிசீலனை செய்ய வேண்டும். மேலும் இப்போது நாட்டில் இருக்கும் பிரச்சினை உற்பத்தியாகிற சர்க்கரையை எப்படி விற்பது என்பதுதான்.

Dam across Vaippar

* 234 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct a dam at Vaippar; and

(*b*) if so, the estimated cost of the dam and the details thereof? முற் பகல் 10.0

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், வெம்பக்கோட்டை கிராமத்திற்கு அருகில் வைப்பாற்றுக்குக் குறுக்கே சுமார் ரூ. 34 லட்சம் செலவில் நீர்த்தேக்கம் ஒன்று கட்டும் திட்டம் பரிசீலனையிலுள்ளது. இந்த செயற்குறிப்பில் (1) 669 ஏக்கர் பரப்புள்ள புன்செய் நிலத்தை இரு போக நன்செய் நிலமாக மாற்றுதல், (ii) 393 ஏக்கர் பரப்புள்ள புன்செய் நிலத்தை ஒரு போக நன்செய் நிலமாக மாற்றுதல் ஆகிய பணிகள் அடங்கும். இதனால் கூடுதலாக 1364 டன் உணவுதானிய உற்பத்தி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு டன்னுக்கு செலவு ரூ. 2494 ஆக இருக்கும். இந்த செயற்குறிப்பு தற்பொழுது (பாசனத்) தலைமைப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : Is it a fact that the original estimate was only Rs. 23 lakhs and this estimate was revised even before the work started? If the original estimate which was Rs. 23 lakhs was revised later on, may I know the reason therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் இரண்டு கட்டங்கள் அடங்கியது. சங்கரநத்தம் கிராமத்திற்கு அருகில் வைப்பாற்றிற்குக் குறுக்கே அணை கட்டுவதற்காக அரசால் ஒப்பளிக்கப்பட்ட பணிக்கு ரூ. 10.13 லட்சம் செலவாகலாமென மதிப்பிடப்பட்டது. ஆத்தங்கரை கிராமத்திற்கு

அருகில் வைப்பாற்றிற்குக் குறுக்கே அணை கட்டுவதற்காக அரசால் ஒப்பளிக்கப்பட்ட பணிக்கு ரூ. 22.26 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டது. ஆக ரூ. 32 லட்சத்திற்கு மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்காண்டுள்ள விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை.

பாலவநத்தம் கிராமத்துக்கு ஏரி

* 235 வினா.—திரு. க. சுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், பாலவநத்தம் கிராமத்தில் ஊருக்குக் கிழக்கே புதிதாகக் கண்மாய் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், பாலவநத்தம் கிராமத்தருகில் ரூ. 2.65 லட்சம் செலவில் கண்மாய் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

சோலையாறு அணை

* 236 வினா.—திரு. இ. ராமசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோலையாறு அணையின் உயரம், அகலம், நீளம் எத்தனை அடி?

(இ) அந்த அணையில் எத்தனை கன அடி தண்ணீர் தேக்க முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். சாதிக் பாட்சா: (அ) சோலையாறு கல்லணையின் உயரம் 345 அடி, அகலம் 268 அடி, நீளம் 1,132 அடி.

சோலையாறு மண்ணணையின் உயரம் 235 அடி, அகலம் 820 அடி, நீளம் 2,950 அடி. இரு அணைகளின் மொத்த நீளம் 4,082 அடி.

(இ) சோலையாறு அணையின் மொத்த கொள்ளளவு 5,540 மில்லியன் கன அடியாகும்.

திரு. இ. ராமசாமி: இந்த அணையில் தேக்கப்பட்டிருக்கிற தண்ணீர் எந்தெந்த மின்நிலையங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது? அப்படி மின்நிலையங்களுக்குப் பயன்படுத்தப்பட்டதுபோக மீதியிருப்பதை பொள்ளாச்சி வட்டமல்லாமல் வேறு எந்தெந்த வட்டங்களுக்கு எவ்வளவு ஏக்கர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சோலையாறு பவர் ஹவுஸ் 1 ஆன்ட் 2. எந்தெந்தப் பகுதிகளுக்கு, எவ்வளவு ஏக்கர்களுக்கு என்று முடிவு இன்னும் செய்யப்படவில்லை.

வேளாண்மைத் துறைச் சீரமைப்பு

* 237 வினா.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய இலாக்கா திருத்தி அமைக்கப்படவிருக்கிறதா?